**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT), THANJAVUR.

SC. No. 59/2019

Prosecution **PW 4**

| | |
|---|---|
| Name | புஷ்பவள்ளி |
| Husband / Father Name | |
| Village | |
| Taluk | |
| Occupation | |
| Religion | |
| Age | |
| Date | 07.04.2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

முதல் விசாரணை -

நான் பின்னவாசலில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அசா.1, 3 ஐ தெரியும். அசா.1 எங்கள் வீட்டில் தங்கி பேராவூரணி அரசு மேல்நிலை பள்ளியில் 12ம் வகுப்பு படித்து கொண்டிருந்தது. 17.07.2000 தேதியில் டியூசனுக்கு சென்ற என் அண்ணன் மகள் அசா.1 ஐ 1ம் எதிரி பழனிவேல் என் அண்ணனுக்கு உடல் நிலை சரியில்லை என்று சொல்லி சென்னைக்கு கடத்தி சென்றுவிட்டார். அசா.1 மாலை வரை வீடு திரும்பவில்லை. நான் அக்கம் பக்கம் விசாரித்த போது, கௌதம் என்பவர் 1ம் எதிரி அசா.1 ஐ அழைத்து சென்றதாக சொன்னார். பிறகு நாங்கள் எங்கள் அண்ணன் சிதம்பரத்திற்கு போன் செய்து சொன்னோம். என் அண்ணன் அசா.3 திருப்பூரிலிருந்து வந்து பேராவூரணி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். ஒரு மாதம் கழித்து சென்னையிலிருந்து அசா.1 போன் செய்து அழைத்து செல்லுமாறு சொன்னார். என் கணவர் சுப்ரமணியனும், என் அண்ணன் சிதம்பரமும் சென்னைக்கு சென்று அசா.1 ஐ அழைத்து வந்து, போலிசாரிடம் ஒப்படைத்தோம். பிறகு அசா.1 ஐ வேறு ஒரு நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுக்க அழைத்து சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை எதிரி தரப்பில்

என் அண்ணன் அசா.3 திருப்பூரில் குடும்பத்துடன் வசித்து வந்தார். அசா.1 ஐ எங்கள் பாதுகாப்பில் படிக்க வைத்து கொண்டிருந்தோம். கௌதமிற்கு அசா.1 எங்கள் பாதுகாப்பில் படித்து கொண்டிருப்பது தெரியும். 1ம் எதிரி பழனிவேல் அசா.1 ஐ அழைத்து சென்றது எனக்கு நேரடியாக தெரியாது. அசா.1 சென்னையிலிருந்து எனக்கு தான் நேரடியாக போன் செய்தார். நான் என் கணவரையும், அண்ணனையும் சென்னைக்கு அனுப்பினேன். சென்னையிலிருந்து என் வீட்டிற்கு வந்த பிறகு, மறுநாள்தான் காவல் நிலையம் அனுப்பி வைத்தோம். 1ம் எதிரி அசா.1 ஐ அழைத்து சென்றதாக அன்று மாலையே எனக்கு தகவல் வந்தது. நான் பேராவூரணி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள். அசா.1 யிடமும் போலிசார் புகார் வாங்கி கொண்டார்கள். புகார் கொடுத்த பிறகு சாட்சி சொல்லதான் வந்துள்ளேன். வேறு எங்கும் நான் செல்லவில்லை. அசா. 1 என் வீட்டில் தங்கி படித்து வந்ததாக முதன் முதலில் தற்போது தான் சொல்கிறேன். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், அசா.1 என் அண்ணன் மகள் என்பதால் போலிசார் சொல்லி கொடுத்தவாறு பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒம்/- ஜி.சுந்தரராஜன்
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
(விரைவு மகிளா நீதிமன்றம்)
தஞ்சாவூர்.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT), THANJAVUR.

SC. No. 59/2019

Prosecution **PW 5**

| | |
|---|---|
| Name | கௌதமன் |
| Husband / Father Name | |
| Village | |
| Taluk | |
| Occupation | |
| Religion | |
| Age | |
| Date | 07.04.2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

முதல் விசாரணை -

நான் பேராவூரணியில் குடியிருந்து டியூசன் சென்டர் வைத்து நடத்தி வருகிறேன். 17.07.2000 ம் தேதி அசா.1 எங்கள் டியூசன் சென்டருக்கு 12 ம்வகுப்பு வேதியல் பாடம் படிக்க வந்தார். கொஞ்ச நேரத்தில் 1 ம் எதிரி பழனிவேல் வந்து அசா.1 ன் பெரியப்பாவிற்கு உடம்பு முடியவில்லை என்றும், அசா.1 ஐ கொரட்டுருக்கு அழைத்து செல்ல வேண்டும் என்றும் என்னிடம் சொன்னார். அசா.1 ஐ நான் அழைத்து விசாரித்த போது, 1 ம் எதிரியை அண்ணன் என்று சொன்னது. பிறகு நான் அசா.1 ஐ 1 ம் எதிரியோடு அனுப்பி வைத்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை எதிரி தரப்பில்

நான் பேராவூரணி கடைத்தெருவில் டியூசன் சென்டர் வைத்துள்ளேன். அது ஒரு காம்பிளக்சில் உள்ளது. என் டியூசன் சென்டர் மாடியில் உள்ளது, கீழே மேலே வரிசையாக கடைகள் உள்ளன. ஆள் நடமமாட்டம் இருக்கும். 1 ம் எதிரியை நான் அதற்கு முன்பு நான் பார்த்ததில்லை. அசா.1, 1 ம் எதிரியை தன் அண்ணன் என்று சொன்னதால், நான் 1 ம்எதிரியுடன் அசா.1 ஐ அனுப்பி வைத்தேன். நான் அசா.1, 1 ம் எதிரியுடன் சென்றது குறித்து டியூசனுக்கு அனுப்பியவரிடம் சொல்லவில்லை. அசா.1

சென்ற அன்று மாலை போலிசார் வந்தார்கள். நான் சொல்வது போல் 1ம் எதிரி டியூசன் சென்டருக்கு வரவில்லை என்றாலும், அசா.1 ஐ அழைத்து செல்லவில்லை என்றாலும், சரியல்ல. போலிசார் சொல்லி கொடுத்தவாறு பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 1ம் எதிரியை நான் பார்த்ததில்லை என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுபடி தட்டச்சிடப்பட்டு

என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒம்/- ஜி.சுந்தரராஜன்
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
(விரைவு மகிளா நீதிமன்றம்)
தஞ்சாவூர்.